RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI:10.34256/irjt22470

OPEN ACCESS

# நா. முத்துக்குமார் கவிதைகளில் சமுதாயம்

செ.எஸ்தர் மேரி [அ, *], ப. தமிழரசி [அ]

[அ] தமிழ்த்துறை, கற்பகம் உயர்க்கல்விக் கழகம், கோவை-21, தமிழ்நாடு, இந்தியா

# Society in Na. Muthukumar's Poems

S. Esther Mary [a, *], P. Thamilarasi [a]

[a] Department of Tamil, Karpagam academy of higher education, Coimbatore-21, Tamil Nadu, India

* Corresponding Author: esthermanys@gmail.com

Received: 11-06-2022
Revised: 02-09-2022
Accepted: 17-09-2022
Published: 09-10-2022

Check for updates

**ABSTRACT**

Tamil literature paves the way for individual life. The individual also lives together with the society. Literature is changing according to social change. Individual human condition sand individual human morals adjust social thoughts. Muthukumar has dealt more with social concepts in his poems. If society is to prosper, family relationships must prosper. He has properly created this idea in his poems. His poems are very realistic and simple. His works are structured in such a way that even common people can easily understand them. Beyond individual power, literature creates a new way of life.

**Keywords:** Muthukumar, Society, Individual life, Poems

## முன்னுரை

மனிதன் என்றும் தனித்து இயங்குபவன். தனி மனித வாழ்க்கையில் அவனுடைய ஒழுக்கம், கலாச்சாரம், பண்பாடு ஆகியவை மனிதனுக்கு மனிதன் மாறுபடும். தனி மனித இயக்கத்தோடு தொடர்புடையது சமுதாயம் என்பதை இக்கட்டுரையின் மூலம் நன்கு அறிந்து கொள்ளலாம்.

ஒரு சிறிய நிலப்பரப்பில் ஒரு பொது வழியைப் பின்பற்றிக் கூட்டமாக வாழும் மக்கள் தொகுதியே சமுதாயம். சமுதாயம் என்ற சொல் ஆறறிவு படைத்த மக்களினத்தோடு பிணைந்து நிற்கும் ஒன்று. மனிதன் தன் இனத்துடன் இணைந்தும் சேர்ந்தும் வாழும் இயல்புடையவன்.இவ்வாறு மனிதர்கள் ஒருவருடன் ஒருவர் சேர்ந்து வாழும் வாழ்க்கை முறையே சமுதாயம் ஆகும்.மனிதன் விலங்கினத்திலிருந்து மாறுபட்டவன். சமுதாயம் என்ற சொல்லுக்கு (society) என்ற ஆங்கிலப் பொருளும் உண்டு.சமுதாயம் ஒரு கூட்டுக் குடும்பம் போன்றது. நன்மை, தீமை, பண்பாடுகள், கலச்சார பின்னடைவுகள், சிக்கல்கள் என்று பல பிரிவுகள் சேர்ந்ததே சமுதாயம். சமுதாயத்தில் கூட்டுநிலை தனிப்பட்ட ஒவ்வொரு உறுப்பினரது வாழ்க்கைக் காலத்தையும் தாண்டி நிலைத்து நிற்கக்கூடியது. “தன்னுடைய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும், இனம் பெருக்குவதற்கும், புதிய தேவைகளை உருவாக்குவதற்கும் பாலமாக அமைவது சமுதாயம். இது முக்கிய பங்கு வகிக்கிறது” (Muthukumar, 2017a).

## இலக்கியமும் சமுதாயமும்

மக்களைப் பற்றிய பல்வகை சிந்தனைகளையும், உணர்ச்சிகளையும், கருத்துருக்களையும் உருவாக்குவது இலக்கியம் ஆகும். கால மாற்றத்திற்கேற்ப சமுதாய சிந்தனைகளும் மாற்றம்

அடைவதால் இலக்கியமும் மாற்றமடைகிறது.இலக்கியத்தின் பாடுபொருள் கால மாற்றத்தினால் மாற்றமடைகிறது.இலக்கியம் என்பது வானத்திலிருந்து வந்து விழுந்த நட்சத்திரம் அல்ல. மன்னர்களில் அரண்மனையில் உள்ள அலங்காரப் பொருளும் அல்ல. அது மக்களின் வாழ்விற்குள் மலர்வது. மனதிற்கு மறைந்திருப்பது. காலம் வரும் போது வெளிப்படுவது. மக்களோடு சேர்ந்து அது மலர்வது, மறைவது, மகிழ்வது, மனதில் வைத்து கொண்டாடுவது சமுதாயத்தோடு இவையனைத்தும் ஒன்றிணைந்து தான் உள்ளது.சமகால இலக்கியங்கள் அனைத்தும் பெரும்பாலும் சமுதாயச் சிக்கல்களை மையமாகக் கொண்டு படைக்கப்பட்டது. அவ்வப்போது சமுதாயத்தில் எழுகின்ற சிக்கல்கள், இயக்கங்கள், அவற்றின் செயல்பாடுகள் ஒரு சில நேரங்களில் இலக்கிய ஆக்கத்தையும் பாதிப்படையச் செய்கிறது. சமுதாயத்தில் ஏற்படும் சிறு மாற்றங்கள் கூட இலக்கியத்தில் பெரிய மாற்றங்களையும் ஏற்படுத்துகிறது. நம் வாழ்வில் அன்றாடம் நடக்கும் நிகழ்வுகளைப் படம் பிடித்து காட்டுவதால், கவிதைகள் மக்கள் மனதில் நிகழ்கால மாற்றத்தை ஏற்படுத்துகிறது. அந்த வகையில் நா. முத்துக்குமாரின் படைப்புகளில் சமுதாயம் என்னும் பகுதி தனிமனிதனையும் சமூகத்தையும் இணைக்கிறது.

## தனிமனிதனும் சமுதாயமும்

சமுதாய வளர்ச்சியில் குடும்ப வளர்ச்சி அடங்கியுள்ளது.குடும்பத்தின் தனி அலகாக விளங்குபவன் மனிதன். தனி மனிதனின்றி சமுதாயம் இல்லை.ஒவ்வொரு தனிமனிதனும் திருமண வாழ்க்கையில் இணையும் போது குடும்பம் என்ற அமைப்பு உருவாகிறது. குடும்பம் என்ற அமைப்பு நிறைவையும் போது சமுதாயம் மலர்கிறது.தனி மனிதனுடைய பார்வையில் உண்பது, உறங்குவது, உறவு கொள்வது, கற்பு, இல்லறம், பாலுணர்வு என்ற வேலைகளைக் கடந்தும் மற்றவர்களோடு உறவு கொள்வதற்கும் சமூகம் தேவைப்படுகிறது. சமூதாயம் இல்லாமல் தனிமனிதனின் வாழ்வு நிறைவடையாது. சமுதாயம் நிகர் நிலை அடையும் போது மனிதனால் படைக்கப்பட்ட இலக்கியமும் உயர்ந்த நிலை அடையும் என்பது நிச்சயம். தனி மனிதனுடைய அறிவாற்றல், முயற்சி, செயல்திறன் போன்ற பண்புநலன்கள் சமுதாயத்தின் படிப்படியாக வளர்ச்சிக்கு உறுதுணையாக அமையும். மேலும் தனிமனித ஒழுக்கம் என்பது மிகவும் இன்றியமையாதது. ஒழுக்கம் என்பது தனி மனிதனுடைய உயிரைவிட மேலானது.

“ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்

உயிரினும் ஓம்பப் படும்”

என்று ஒழுக்கமுடைமை அதிகாரத்தில் ஒழுக்கத்தின் முக்கியத்துவத்தை வள்ளுவர் கூறியுள்ளார் (Parimelalhagar, 2017).

தனிமனிதன் சமூகத்தோடு தொடர்பு கொண்டு வளரும் வித்தை, மனித நாளோடு ஒன்றிணையும் நாள் தான் சமுதாயம் உருவான நன்னாள். சமுதாயத்தில் எவரும் தனித்து இயங்குதல் சாத்தியம் அன்று. தனது தேவைகளுக்காக ஒருவர் மற்றொருவர்களுடன் உறவாடுவது உலக இயற்கை. மனிதன் தனது உழைப்பால் மட்டுமே அனைத்து வசதிகளையும் பெற்று விட முடியாது. தான் வாழும் சமூகத்தின் உறுப்பினர்களுடைய உழைப்பை சார்ந்தே வாழவேண்டிய கட்டாயத்திற்கு உட்பட்டவனாக இருக்கின்றான். அதைப் போலவே தன் பங்கிற்குச் சமூக உறுப்பினர்களாக உழைக்க வேண்டிய கட்டுப்பாடு உடையவனாகவும் இருக்கிறான்.

இந்த அடிப்படையில் சமூக உறுப்பினர் அனைவரும் உழைக்க வேண்டிய பொறுப்புடையவர்களாக இருக்கிறார்கள். தனிமனித உரிமையைக் காட்டிலும் சமுதாய உரிமைக்கே முக்கியத்துவம் அதிகம் கொடுக்க வேண்டும்.பண்டைய கால மனித சமுதாயத்தின் வரலாற்றை நோக்கும் போது இயற்கையோடு மனிதன் இடையறாது நிகழ்த்தும் போராட்டம் இன்றளவும் நீடித்து நிலவுவதை அறியமுடிகிறது. தேவையின் அடிப்படையில் இயற்கையைக் கொஞ்சம் கொஞ்சமாக வென்றெடுக்க தனிமனித ஆற்றலைக் காட்டிலும் கூட்டுமுயற்சியே கூடுதலாகத் தேவைப்படுகிறது.

எனவே, தனது தனிப்பட்ட உரிமைகளை உணர்த்துவதற்கு முன்னரே தன் சமூகக் கடமைகளின் மனிதன் உணர்ந்து கொண்டான் எனலாம். தனிமரம் தோப்பாகாது கூடி வாழ்ந்தால் கோடி நன்மை, ஒற்றுமையே வலிமை, ஒன்று பட்டால் உண்டு வாழ்வு என்பன போன்ற பழமொழிகள் தனிமனிதன் சமுதாயத்தைச் சார்ந்தே வாழவேண்டியுள்ளது அதுவே நியதியும் ஆகும் என்பதை வலியுறுத்துகின்றன.

## எழுத்தாளரும் - சமுதாயமும்

எழுத்தாளக்கும் சமூகத்திற்கும் ஒரு இணைந்த பந்தம் ஒன்று உள்ளது. தனது கவிதைத் தொகுப்புகளிலும், கவிதை வரிகளிலும் உறவுகளுக்கும், அதனால் ஏற்படும் சமூக மாற்றங்களுக்கும் முக்கியத்துவம் மிகுந்துள்ளது.நல்லதொரு சமுதாயம் தனி மனிதனையும் கவிஞனாக மாற்றுகிறது. நாம் பார்க்கும் காட்சிகளின் வெளிப்பாட்டை மனதில் இருத்தி காண்பதை எல்லாம் கவினுற எழுத்து ஆற்றல் படைக்கிறான் கவிஞன்.

எனவே, ஒரு நல்ல கவிஞன் நல்ல கமூகத்தை கடந்து வருகிறான் என்பதில் ஐயமில்லை. சில கவிதைகள் சமூகத்தை மாற்றி அமைக்கும் வல்லமை படைத்தவையாக இருக்கிறது.சில கவிதைகள் சமூகத்தை கடந்து செல்லும் ஆற்றல் படைத்தவர்களாக மாற்றம் அடையச் செய்கிறது.சில கவிதைகள் சமூகத்தை புரிந்து கொள்ளவும் செய்கிறது.எழுத்தாளருக்கும் சமூகத்தைற்கு உள்ள தொடர்பு நகமும் சதையும் போல் ஒன்றிணைந்தவையாகும்.சமூகத்தோடு இணைந்தவையே குடும்பம் ஆகும்.

வாழ்க்கை என்றால் ஆயிரம் இருக்கும் வாசல்தோறும் வேதனை இருக்கும். என்ற பாடல் வரிகளுக்கு ஏற்ப குடும்பம் என்றாலே வறுமை இருக்கும். என்பதை கீழ்வரும் பாடல் வரிகளில் அறியலாம்.

நம் வீட்டிலிருந்து எடுத்து வந்த பழைய தலையணையை பிரித்து பார்த்ததில் நைந்த பஞ்சுகளினூடே தம்பியின் கிழிந்த சட்டையும் கையில் கிடைத்தது (Muthukumar, 2020).

இவ்வரிகளில் குடும்பத்தின் வறுமையையும், சமூகத்தின் பின்தங்கிய மாற்றத்தையும் எடுத்துரைக்கிறது.

இலக்கிய ஆசானுக்கும் இலக்கியத்திற்கும் உண்மையான நெருக்கமான தொடர்பு இருக்கும் பொழுது மட்டுமே இலக்கியம் சிறப்படைகின்றது. மக்களால் நம்பப்படுகிறது.அந்நெருக்கம் படைப்பாளன் கூறுகின்ற சமுதாய நிகழ்வுகளால் உண்டாகின்றது.

அவ்வகையில் கவிஞர் நா. முத்துக்குமார் தன் வாழ்க்கையிருந்தும் புறவுலக வாழ்க்கையிலிருந்தும் பெற்ற அனுபவங்களே படைப்புகளாக அமைத்துள்ளார்.

## உறவுகளும் சமுதாயமும்

உறவுகள் இன்றியேல் உலகம் இல்லை.குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை என்பதற்கேற்ப உறவுகளும் நம்முடன் இணைந்தவை.நம் உடலின் ஒரு அங்கம் போன்றது உறவுகள். தனிமனிதனும் சமூகமும் உறவுகளால் இணைந்திருக்கின்றன.தந்தை, மகன், அக்கா, தம்பி போன்ற அனைத்து உறவுகளும் இவருடைய கவிதைகளில் இடம்பெற்றுள்ளன.

“அழுது கொண்டிருக்கும் அம்மாவின் முகம் போல அவ்வளவு எளிதாகப் பிள்ளைகளுக்குக் கிடைத்து விடுவதில்லை.அழுது கொண்டிருக்கும் அப்பாவின் முகம்”

உறவுகள் தரும் சுகத்தை இப்புத்தகமானது வரிகளில் மறைத்திருக்கிறது.உறவுகள் என்பதன் பொருள், உறவுகளால் மனிதன் அடையும் நன்மை ஆகியவை தெளிவாக எடுத்துக் காட்டுகிறது (Muthukumar, 2017b).

ஒரு தனி மனிதன் தன் வாழ்க்கையில் எவ்வளவு உயரமான நிலையை அடைந்தாலும் வாழ்க்கை ஒரு வெற்றுக் காகிதமே, உறவுகள் நிறையும் போது அக்காகிதம் காவியமாகிறது.உரவுகளோடு வாழும் மனிதன் ஓர் உன்னத நிலையை அடைகிறான். பல்வேறு சிக்கல்கள் அடங்கியபோதிலும் அதில் இருக்கும் சுவாரிசியம் வியக்கத்தக்கவை என்பதை இந்நூல் அறியச் செய்கிரது.

"அம்மாவுக்காய் அழுகிற
ஈர விறகுகளின்
புகைச்சோகம் தாங்கி
மேலும் கறுக்கும் அது"

உறவுகளை நீடித்து நிலைத்து நிற்க வைப்பது சமூதாயம். உறவுகளை உறவுகளென்று உணர வைப்பது சமூகம். தனிமனிதனுக்கும் உறவுகளுக்கும் எழுகின்ற இன்னல்கள், தயக்கங்கள், சிக்கல்கள், மன வருத்தங்கள், பிளவுகள் ஆகியவற்றை நா. முத்துக்குமாரின் கவிதை வரிகள் படம் பிடித்துக் காட்டுகிறது (Muthukumar, 2020).

தனது சாயலின் மற்றொரு பிம்பம் தந்தை. தந்தையின் உலகம் என்றும் தன் குடும்பத்தை சுற்றியே இருக்கும். தந்தையின் கவிதையை படிப்பது அலாதி ஆனந்தம்.தூசி படிந்த அலமாரியும், புது வாசம் தரும் புத்தங்களும் ஒரு புது அனுபவம்.இப்புது உணர்வை தனது கவிதைகளில் காவியமாக்கியுள்ளார்.

"அந்துப்பூச்சி
கரையான்
செல்கள் என
அப்பாவின்
கௌரவ தோழர்கள் வந்துப்போகும்
அவ்வுலகம்
புத்தகங்களால் ஆனது"

தனது பயணத்தை தன் மகனோடு வாழ்ந்திருக்கிறார் கவிஞர். எல்லா தந்தைக்கும் ஒரு கனவு இருக்கும். தனது கனவுகளை தன் இளம் பருவத்தோடு ஒன்றிணைந்து கூறியுள்ளார் (Muthukumar, 2021).

## நா.முத்துக்குமார் கவிதைகளில் சமுதாயம்

மானுடக் கூறுகள் பலவும் சிதைந்து வருகின்ற சூழலைச் சுட்டிக்காட்டி, அச்சிதைவுகள் மீதான அழுத்த நிகழ்வாக முத்துக்குமார் கவிதைகளில் திகழ்வதைக் காண முடிகிறது.சமூகத்தில் ஒவ்வொரு தனிமனிதனுக்கும், மனித உணர்வுகளுக்கும் மதிப்பளிக்க வேண்டும்.பொருளாதார மனிதனின் மதிப்பை நிர்ணயம் செய்வது சமூக அவலமாகும்.

மனிதன் சக மனிதனை நேசிக்கப் பழக வேண்டும் என்று சமூக தேவைகளை கவிஞர் தம் கவிதைகளில் அனுபவம் சார்ந்த உணர்வாகப் பதிவு செய்துள்ளார். முத்துக்குமார் தன் கவிதைகளில் குடும்ப உறவுகள் சமுதாயத்தை பலப்படுத்துகிறது என்றும், குடும்ப உறவுகள் தனி மனிதனை நிகர்நிலைப்படுத்தும் என்றும் தன் கவிதை வரிகளில் தெளிவாக எடுத்து இயம்புகிறார்.

மேலும், இவரது கவிதைகள் பெரும்பாலும் தன்னையும் தன் உணர்வையும் பேசும் தன்வயப் படைப்புகளாக இருக்கின்றன.இதில் பெருவாரியான இடத்தைப் பிடிப்பது மானுட கலாச்சாரமும் மனித உறவு சார்ந்த மதிப்புச் சிந்தனைகளுமே.மனிதனின் மாண்புகளும், அனைத்து மனிதர்களையும் சம்மாக நுகர வழிவகுக்கும் மனித உறவு சார்ந்த நேயத்தின் சாரத்தையும் இவரது படைப்புகளில் படைக்கப்பட்டுள்ளன.

நா.முத்துக்குமார் தனது கவிதைகளில் அன்பு, காதல், பாசம், உணர்வுகள், தாய்மை, பெண்மை, இல்லறம், பிரிவு போன்ற அனைத்து உணர்வுகளையும் தனது கவிதை வரிகளில் படைத்துள்ளார். கவிதைகளில் மட்டுமல்லாது, தான் எழுதுய திரைப்படப் பாடல்களிலும் இந்த உணர்வுகள் இசையில் மிதக்கும் வண்ணம் அமைத்திருப்பார்.

## முடிவுரை

பெரும்பாலான மக்களினம் சமுதாயத்தோடு ஒன்றிணைந்து வாழ்கிறது. தனிமனித அமைப்பு குடும்பம், குடும்பத்தின் அமைப்பு சமுதாயம் என்பதை நாம் உணர்ந்து கொண்டோம்.கவிஞரின் வாழ்க்கையும், வளர்ப்பும், வளர்ச்சியும், வளமும் சமுதாயம் என்ற அங்கத்திற்குள் அடங்கியிருக்கிறது. இறுதியாக, சமூகம் என்பது தனிமனிதனின் சாயல் தான். அந்த சாயலில் பல்வேறு முகங்களில் தான் நம் உறவுகள், எண்ணங்கள், இயல்புகள், குறிக்கோள், நட்பு, காதல், திருமணம், குழந்தை ஆகியவை அடங்கியிருக்கிறது. கவிஞரின் கவிதைகளும், திரைப்படப் பாடல்களிலும் சமுதாயத்தின் பிம்பங்கள் பார்வைக்காக மட்டுமல்லாமல், பக்குவப்படுத்தும் வகையிலும் அமைந்துள்ளது.

## References

Muthukumar, N. (2017a) Aniladum mundril, Vikadan Prasuram, Chennai, India

Muthukumar, N. (2017b) Vedikkai Paarpavan, Vikadan Prasuram, Chennai, India

Muthukumar, N. (2020) Pattampoochi Virpavan, Discovery Book Palace, Chennai, India

Muthukumar, N. (2021) Newtonin Moontam Vithi, Discovery Book Palace, Chennai, India

Parimelalhagar (2017) Thirukural, J.K.R. Publications, Sivakangai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License